சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :EA No:1/2019
in
EP No: 52/2015
in
OS:168/2001

2023ம் ஆண்டு மார்ச் திங்கள் 01ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் இளவரசி (RW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

01.03.2023

நான் 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் துணை மேலாளராக பணிசெய்கிறேன். என்னுடைய சாட்சியத்தை கூடுதல் பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மீடியம் டர்ம் லோன் அக்ரீமெண்ட்டு சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ1 ஆகும். பொறுப்புறுதி பத்திரம் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 2 ஆகும். கடன் ஒப்புகை கடிதம் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 3 ஆகும். கிரைய அடமான பத்திரம் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 4 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பு சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 5 ஆகும். வீரபத்திர செட்டியாருக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 6 ஆகும். பி செடியூல் 1வது லக்க சொத்தில் சர்வே எண்.430/24, பட்டா எண்.458, பெரியசாமி பெயரில் உள்ள பட்டா சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ 7 ஆகும். சர்வே எண். 430/26, பழைய புல எண்.124, பட்டா எண்.459 2ம் கிளைம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பட்டா சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 8 ஆகும். புல எண்.53/5A, 2ம் கிளைம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள தீர்வு ரசீது சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 9 ஆகும். நிலங்களின் புலப்படம் நகல் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 10 ஆகும். பெரியசாமி பெயரில் உள்ள வில்லங்கசான்று சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 11 ஆகும். 2ம் கிளைம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது எண்ணம்–4 சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ 12 ஆகும். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.